சார்பு நீதிமன்றம், மேலூர்

HMOP. 145/2025

பெயர் : பிரதீப்ராஜ்
தகப்பனார் பெயர் :கண்ணன்
கணவர் பெயர் :
வயது :31
கிராமம் :கள்ளக்குறிச்சி
வட்டம் :
தொழில் :ICICI Bank, Branch sales manager

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

11.11.2025

ம.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த மனுவில் 1வது மனுதாரர். என்னுடைய மனைவி இந்த மனுவில் 2வது மனுதாரர் ஆவார். என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். எனக்கும், 2வது மனுதாரரான எனது மனைவிக்கும் கடந்த 15.09.2024 தேதியில் ஸ்ரீகோவிந்தராஜ பெருமாள் திருக்கோவிலில் வைத்து அன்று இந்து முறைப்படி திருமணம் நடந்தது. எங்களுக்குள் குழந்தைகள் திருமணத்தில் இல்லை. எனக்கு சீர்வரிசையாக கொடுத்த பொருட்கள், தங்கநகைகள், வெள்ளிசாமான்கள் என்னுடைய மனைவியான 2ம் மனுதாரரிடம் கொடுத்துவிட்டேன். மேலும் 2ம் மனுதாரருக்கு பணம் எதுவும் ஜீவனாம்சமாக கொடுக்கவில்லை. நாங்கள் மனமொத்து விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளோம். திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.1. திருமண புகைப்படம் ம.சா.ஆ.2. என்னுடைய ஆதார் அட்டை ஒளிநகல் ம.சா.ஆ.3 ஆக மனுப்படி எங்களுக்குள் ஏற்பட்ட திருமணத்தை ரத்து செய்ய வேண்டி பிரார்த்திக்கிறோம்.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.11 21:42:32 +0530

Sub Judge
Melur